ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

10.07.2025

1. தானமும் தருமமும் தரணியெங்கும்
தனிப்பெருங் கருணை வடிவாக
ஞானபண்டிதன் அருளால் நிரம்பிட
ஞானதேசிகன் யான் பிரணவக்குடில் அமைத்து

2. அமைத்து உலகோர்க்கு வழிகாட்டி
அன்னதான சேவை வளர்த்துமே
அமைத்து தயவை மக்களிடை
அளவிலாப் பெருகிட அருளி வருகிறேன்

3. வருகவே குருபூர்ணிமா நன்னாளாம்
வல்லமைமிக்க விசுவாவசு மிதுன திங்கள்
ஆறுமுக அரங்கன் வேத குருவார அருளாசி
அருட்சுவடி வழி மக்களுக்கு அருளுவேன்

4. அருளவே பிரணவக் குடிலும்
ஆறுமுகனார் முழுமைபட நிரம்பி
அருளும் மகத்துவம் நிறைந்த
அப்பனே ஞான சபையாகும்

5. ஆகவே உலகோர் அணுகி
ஆற்றல் மிக்க குருபூர்ணிமா
வகையான இவை நன்னாளில்
வணங்கி தீட்சை ஏற்க

6. ஏற்கவே அரங்கன் என்னுடன்
எல்லா ஞானியர் பெருமக்களும்
வெற்றிவேலவனும் இணைந்து ஆசி
வினை வெல்லும் சக்தியாக மாறும்

7. மாறுமே மனபேதம் விலகி
மனத் தெளிவு குருவருளாக
ஆறுமுகனார் துணை கூடிட
அனைத்து சித்தியும் கிட்ட நேரும்

8. நேருமைபட சுத்த சன்மார்க்க
நெறியில் திளைத்து நின்று
வறுமை பிணி வாட்டம் இல்லா
வளமும் ஞானபலமும் கூடியே

9. கூடியே தருமம் வளர்க்கின்ற
குறைவிலா சக்தியும் அடைவர்
நாடியே இவை நன்னாளில்
நன்மைபெற அன்னதான சேவை வழி

10. வழிதனில் பொருளுதவி செய்து
வணங்கித் தொண்டும் புரிய
அழிவிலா ஞானிகள் ஆசிபட
அவரவரும் வசதிவளம் கூடி

11. கூடியே தேடித்தேடி தருமசேவை
குவலயம் எங்கும் செய்திடும்
தடையிலா அருள் பொருள்பலமும்
தவபலமுமாக சக்தி கூடி சிறப்பர்

ஆறுமுக அரங்கன் யான் அருளிய
குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி